# மதுரவாயல் – துறைமுகம் ஈரடுக்கு உயர்மட்ட பாலம்: மத்திய சுற்றுச்சூழல் நிபுணர் குழு ஒப்புதல்

புதுடெல்லி, பிப்.2–

மதுரவாயல் – துறைமுகம் ஈரடுக்கு உயர்மட்ட பாலம் அமைக்கும் பணிக்கு மத்திய சுற்றுச்சூழல் நிபுணர் குழு ஒப்புதல் அளித்துள்ளது. சென்னையின் கடும் போக்குவரத்து நெரிசலை கடந்து சரக்குகளை ஏற்றிவரும் வாகனங்கள் சென்னை துறைமுகத்துக்கு செல்வதில் பல ஆண்டுகளாக சிரமம் இருந்து வந்தது. இதனால் சரக்கு வாகனங்கள் சென்னை துறைமுகத்துக்கு செல்லாமல் ஆந்திராவில் உள்ள துறைமுகங்களை நாட தொடங்கியதால் தமிழ்நாட்டிற்கான வருவாய் பாதிக்கப்பட்டது.

இதனை தவிர்க்க கடந்த 2010 ஆம் ஆண்டு அப்போது முதலமைச்சராக இருந்த கருணாநிதி தலைமையிலான தி.மு.க. அரசு மதுரவாயல் முதல் எண்ணூர் துறைமுகம் வரை ரூ.1,815 கோடி மதிப்பில் மேம்பாலம் அமைக்க முடிவு செய்தது. கடந்த 2009ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங், முதல்வர் கருணாநிதி ஆகியோரால் இந்த திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. எந்தெந்த வழித்தடங்களில் பாலம் செல்ல வேண்டுமோ, அங்கெல்லாம் தூண்கள் அமைக்கப்பட்டன.

## பொதுமக்களுக்கு பாதிப்பு

இதனிடையே கூவம் ஆற்றில் தூண்கள் அமைப்பதால் சுற்றுச்சூழல் பிரச்சனை ஏற்படும் எனக்கூறி 2011 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா தலைமையிலான அதிமுக அரசு, எண்ணூர் மதுரவாயல் மேம்பால திட்டத்தை கிடப்பில் போட்டது. திட்டம் கிடப்பில் போடப்பட்டதால் 10 ஆண்டுகளுக்கும் மேலாக எண்ணூர் மதுரவாயல் மேம்பாலத்துக்காக அமைக்கப்பட்ட தூண்கள் நோட்டீஸ் ஒட்டுவதற்கும் விளம்பர போர்டுகள் வைப்பதற்குமே பயன்பட்டு வருகின்றன. சென்னையின் அடையாளமாகவே இந்த தூண்கள் மாறிவிட்டன. போக்குவரத்துக்கும் பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தி வந்த இந்த தூண்களின் மேல் எப்போது மேம்பாலம் வரும் என பொதுமக்கள் வழிமேல் விழி வைத்து காத்திருந்தனர்.

இந்த நிலையில் மத்திய நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி இந்த பாதையில் இரட்டை மேம்பாலம் அமைக்கப்படும் என அறிவித்தார். இந்த திட்டத்திற்கு ஆட்சிக்கு வந்த ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு ஒப்புதல் வழங்கியதை அடுத்து முதல்கட்ட தயாரிப்புப் பணிகளில் நெடுஞ்சாலைத் துறை ஈடுபட்டது. இந்த நிலையில் மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைந்த பின் இந்த திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த மே மாதம் கையெழுத்தானது. அதன்படி சென்னை துறைமுகம் முதல் மதுரவாயல் வரையிலான ஈரடுக்கு உயர்மட்ட மேம்பால திட்டத்திற்கு கடலோர மண்டல மேலாண்மை அனுமதி வழங்க மத்திய அரசின் நிபுணர் மதிப்பீட்டு குழு ஒப்புதல் வழங்கியது.

இதன்மூலம் விரைவாக சரக்குகள் வந்து சேர்ந்து சென்னைதுறைமுகத்தின் திறன் 48 சதவீதம் அதிகரிக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இது சிவானந்த சாலை முதல் கோயம்பேடு வரை ஈரடுக்கு மேம்பாலமாக அமைகிறது. ஒரு பாலத்தில் சரக்கு வாகனங்கள் மட்டும் செல்லும். மற்றொரு பாலத்தில் பொதுமக்களின் வாகனங்கள் செல்லும்.

## மத்திய சுற்றுச்சூழல்

நிபுணர் குழு ஒப்புதல்இந்நிலையில் சென்னை – மதுரவாயல் துறைமுகம் ஈரடுக்கு உயர்மட்ட பாலம் அமைப்பதற்கு மத்திய சுற்றுச்சூழல் நிபுணர் குழு ஒப்புதல் வழங்கியது. 20.56 கிலோ மீட்ட தூரத்திற்கு 4 வழி சாலையாக சென்னை மதுரவாயல் உயர்மட்ட பாலம் அமைக்க நிபந்தனைகளுடன் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ரூ.5 800 கோடியில் துறைமுகம் மதுரவாயல் பறக்கும் மேம்பால திட்டம் செயல்படுத்த உள்ளது.

உயர்மட்ட பாலத்திற்காக எழுப்பப்படும் பில்லர்களால் மழை மற்றும் சாதாரண காலங்களில் நீரோட்டத்திற்கு தடை ஏற்படக் கூடாது என்றும் பாலம் அமைக்க தற்காலிகமாக அமைக்கப்படும் கட்டமைப்பு பணிகள் முடிந்த ஒரு மாதத்திற்குள் அகற்றப்பட வேண்டும் என்றும் நிபந்தனை வைக்கப்பட்டுள்ளது. கட்டுமானத்தின் போது அகற்றப்படும் கழிவுகளை நீர்நிலையிலோ அல்லது அதற்கு அருகிலோ கொட்ட கூடாது என்றும் நிபந்தனை விதித்து இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கி மத்திய அரசுக்கு சுற்றுச்சூழல் நிபுணர் குழு பரிந்துரை செய்துள்ளது. இதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்பட்டு அடுத்த 30 மாதத்திற்குள்முடிக்க அரசு திட்டமிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# திருப்பணிகளில் பின்பற்றவேண்டிய நடைமுறைகளை விளக்கும் “திருக்கோயில் திருப்பணி கையேடு” வெளியீடு

சென்னை, பிப்.2–

கோயில் திருப்பணிகளில் பின்பற்றவேண்டிய நடைமுறைகளை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் “திருக்கோயில் திருப்பணி கையேடு” வெளியிடப்பட்டுள்ளது என்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இதுகுறித்து அமைச்சர் பி.கே. சேகர்பாபு கூறியதாவது:–

இக்கையேட்டில்கோயில்திருப்பணி வேலைகளை தொடங்குதல், திருப்பணிகளில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள், ஆவணப்படுத்துதல் மற்றும் அதற்கான முறைகள், திருப்பணிகளை அடையாளப்படுத்துதல் மற்றும் தொல்லியல் வல்லுநர் கருத்துரு பெறுதல், திட்ட மதிப்பீடு தயாரித்தல், மண்டல மற்றும் மாநில அளவிலான வல்லுநர் குழுக்களின் ஒப்புதல் பெறுதல்,

வரைப்பட அங்கீகாரம் பெறுதல், மதிப்பீடு தயார் செய்தல் மற்றும் அதில் இடம் பெறவேண்டிய இனங்கள், நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறுதல், ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள், உபயதாரர் திருப்பணி, பணி ஆணை வழங்குதல், பணி உடன்படிக்கை ஏற்படுத்துதல், பணிகளை தொடங்கி வைத்தல், பணித்தளம் ஒப்படைத்தல், தரக்கட்டுப்பாடு படிவங்கள், அளவீட்டு புத்தகம் பதிவு செய்தல்,

சலுகை விலையில்...

பொறியாளர்களால் சரிபார்த்தல், பட்டியல் தயாரித்தல், பணிமுடிவு அறிக்கை, புகைப்படங்களுடன் பணி முன்னேற்றங்களை உறுதிப்படுத்துதல், பாலாலயம், சைவ மற்றும் வைணவ கோயில்களுக்கான நடைமுறைகள் அஷ்ட பந்தன மருந்து சாத்துதல், திருக்குட நன்னீராட்டு பெருவிழா, குடமுழுக்கின்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், திருக்கோயில் பராமரிப்பு, நிதி ஆதாரம், திருக்குளங்களை சீரமைத்தல், திருத்தேர் புனரமைத்தல், உபயத் திருப்பணி, துறையின் நிதி விடுவித்தல் போன்ற நடைமுறைகள் குறித்த வழிகாட்டுதல்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன.

இக்கையேடு இந்து சமய அறநிலையத்துறையில் பணியாற்றும் அனைத்துச் சார்நிலை அலுவலர்களுக்கும் கட்டணமில்லாமல் வழங்கப்பட்டுள்ளது. கோயில் திருப்பணி நடைமுறைகள் குறித்து அறிந்து கொள்ள விரும்பும் இறையன்பர்கள், உபயதாரர்கள், பொதுமக்கள் இக்கையேட்டினை ஆணையர் அலுவலகம் மற்றும் 48 முதுநிலை கோயில்களில் அமைந்துள்ள புத்தக விற்பனை நிலையங்களில் சலுகை விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வாறு அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

# இறுதிச்சடங்கின் போது எழுந்து உட்கார்ந்த 102 வயது மூதாட்டி

டேராடூன், பிப். 2–

உத்தராகண்ட் மாநிலம் நர்சன் குர்த் பகுதியில் வசித்து வருபவர் வினோத். இவரது தாயார் ஞான தேவி (வயது 102). கடந்த சில காலமாக உடல்நிலை சரியில்லாமல் இருந்த ஞானதேவி, திடீரென மூர்ச்சையாகி மயங்கி விழுந்தார். உடனடியாக குடும்பத்தினர் மருத்துவரை அழைத்து பரிசோதித்த போது, அவர் இறந்து விட்டதாக மருத்துவர் அறிவித்தார்.

இந்த செய்தியால் குடும்பத்தினர், நல்லா வாழ்ந்த மனுஷி.. ரொம்ப சிறப்பா அடக்கம் செய்யணும் என்று தாயின் மரணம் குறித்து உறவினர்கள் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தனர். உடனே, ஏராளமானோர் வீட்டில் திரண்டு இறுதிச் சடங்கிற்கு தயாராகினர்.

மகன் வினோத் குமார் கூறுகையில், "அம்மாவின் இறுதிச் சடங்கிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் குடும்பத்தினர் முடித்து விட்டனர். மேலும் அவரது இறுதிச் சடங்குகளுக்காக உடலைப் பாடையிலும் கிடத்தி இருந்தோம். அப்போது திடீரென அம்மாவின் உடலில் சலனம் ஏற்பட்டது. கொஞ்சம் குலுங்கியதும் அம்மா கண்களைத் திறந்தார்.

இந்தக் காட்சியைக் கண்டு அனைவரும் வியந்து ஆச்சர்யத்தில் உறைந்தோம். சில உறவினர்கள் பயத்தில் தெறித்து ஓடினார்கள். அம்மாவுக்கு சுயநினைவு வந்தவுடனே, அந்தச் சூழல் முழுவதும் சந்தோஷமாக மாறியது என்று கூறி உள்ளார்.

அதுதவிர முழு கிராமத்திலும் மூத்தாட்டி உயிர்த்தெழுந்ததை கொண்டாடுகிறது. சுயநினைவு திரும்பிய பிறகு, அவரது தாய் பழைய படி சாதாரண உணவை சாப்பிட்டு வருகிறார். மொத்த கிராமமும், செத்து பிழைச்ச பாட்டியை ஆச்சர்யத்துடன் நேரில் வந்து பார்த்து, ஆசி வாங்கி செல்கிறது.

# நடுத்தர மக்களின் கனவுகளை நிறைவேற்றும் ‘பட்ஜெட்’: மோடி கருத்து

புதுடெல்லி, பிப்.2

**ஏழைகள், நடுத்தர மக்களின் கனவுகளை நிறைவேற்றும் ‘பட்ஜெட்’ என்று பிரதமர் மோடி கூறியுள்ளார்.**

2023–24ம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட் நேற்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்த இந்த பட்ஜெட்டை, பிரதமர் மோடி வரவேற்று உள்ளார். இது தொடர்பாக அவர் கூறியிருப்பதாவது:

சுதந்திரத்தின் 75வது ஆண்டு அமிர்த காலத்தில் தாக்கல் செய்யப்பட்டு உள்ள இந்த முதல் பட்ஜெட், வளர்ந்த இந்தியாவுக்கான அடித்தளம் அமைக்கிறது.

நடுத்தர மக்கள், விவசாயிகள் மற்றும் லட்சிய சமூகத்தினரின் கனவுகளை இந்த பட்ஜெட் நிறைவேற்றும். வளமான மற்றும் வளர்ந்த இந்தியாவின் கனவுகளை நனவாக்க நடுத்தர சமூகம் ஒரு பெரிய சக்தியாகும். இந்த சமூகத்தை மேம்படுத்துவதற்கு எங்கள் அரசு பல முடிவுகளை எடுத்துள்ளது.

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையின் வெற்றியை விவசாயத் துறையிலும் பிரதிபலிக்க வேண்டும். அதற்கான டிஜிட்டல் உள்கட்டமைப்பை அமைப்பதற்கான திட்டம் கொண்டு வரப்பட்டு உள்ளது.

இது கிராமப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு கூட்டுறவு சங்கங்களை மையமாக மாற்றும்.

உள்கட்டமைப்பில் முன்னெப்போதும் இல்லாத வகையில் ரூ.10 லட்சம் கோடி முதலீடு செய்வது வளர்ச்சிக்கு வேகத்தையும் புதிய ஆற்றலையும் தரும். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

## பெயர் மாற்றம்

P SIVAKUMAR, தந்தை பெயர்: Thiru Poovanintha Perumal S, பிறந்த தேதி: 06.07.1971, (பிறந்த இடம்: சென்னை), ப.நெ.5, பு.நெ.9, சரஸ்வதி தெரு, பாரத் நகர், ஆதம்பாக்கம், சென்னை–600 088, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SIVAKUMAR POOVANINTH PERUMAL**, என்று அழைக்கப்படுகிறேன்.

P SIVAKUMAR

## பெயர் மாற்றம்

VIJI RAJAMAINTHAN, கணவர் பெயர்: Rajamainthan, பிறந்த தேதி: 22.09.1959, A–306, AASHRITHA ANAND ESTATES, 4/55, விபிகே சாலை, டெலிபோன் நகர், விடிசி பெருங்குடி, சென்னை–600 096, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Vijiyalakshmi Rajamainthan**, என்று அழைக்கப்படுகிறேன்.

VIJI RAJAMAINTHAN




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை, தாய்லாந்து நாட்டில், பாங்காக்கில் 2022 டிசம்பர் மாதம் 1–ந் தேதி முதல் 18–ந் தேதி வரை நடைபெற்ற வேகோ ஆசியன் கிக் பாக்ஸிங் சாம்பியன்ஷிப் போட்டியில் 50 கிலோ எடைப்பிரிவில் தங்கப் பதக்கம் வென்ற வீராங்கனை என்.நீனா மற்றும் தமிழ்நாடு மாநில அமெச்சூர் கிக் பாக்ஸிங் சங்க பொதுச் செயலாளர் சி.சுரேஷ் பாபு மற்றும் பயிற்சியாளர்கள், நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

## ரெடிங்டன் லிமிடெட் (முன்பு ரெடிங்டன் (இந்தியா) லிமிடெட் என அழைக்கப்பட்டது)

Redington
SEAMLESS PARTNERSHIPS

பதிவு அலுவலகம் : பிளாக் 3, பிளத்தின், ரெடிங்டன் டவர், உள்வட்ட சாலை, மேற்கு சரஸ்வதி நகர், 4வது தெரு, புழுதிவாக்கம், சென்னை 600 091
வலைதளம்: www.redingtongroup.com | மின்-அஞ்சல்: investors@redingtongroup.com
CIN: L52599TN1961PLCO28758
போர்டு எண்: +91-44-42243353 | ஃபேக்ஸ் எண்: +91-44-22253799

**டிசம்பர் 31, 2022–உடன் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் அறிக்கை**

ரூ. கோடிகளில்

| வ. எண். | விவரங்கள் | ஒருங்கிணைந்தது | | | |
|---|---|---|---|---|---|
| | | முடிந்த காலாண்டு | முடிந்த காலாண்டு | முடிந்த ஒன்பது மாதங்கள் | முடிந்த ஆண்டு |
| | | டிசம்பர் 31, 2022 தணிக்கை செய்யப்படாதது | டிசம்பர் 31, 2021 தணிக்கை செய்யப்படாதது | டிசம்பர் 31, 2022 தணிக்கை செய்யப்படாதது | மார்ச் 31, 2022 தணிக்கை செய்யப்பட்டது |
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய் | 21,674.31 | 16,600.74 | 57,528.19 | 62,644.01 |
| 2 | வரி மற்றும் விதிவிலக்குகளுக்கு முன் லாபம் | 494.25 | 486.73 | 1,378.78 | 1,622.36 |
| 3 | வரிக்கு முன் லாபம் | 494.25 | 486.73 | 1,378.78 | 1,622.36 |
| 4 | வரி மற்றும் விதி விலக்குகளுக்கு பின் லாபம் | 392.75 | 397.06 | 1,111.00 | 1,314.87 |
| 5 | விரிவான மொத்த வருவாய் | 435.24 | 297.45 | 1,380.37 | 1,248.97 |
| 6 | பங்கு மூலதன மதிப்பு | 156.31 | 156.28 | 156.31 | 156.29 |
| 7 | இருப்புகள் மற்றும் உபரி (கடனீட்டுப் பத்திரங்களின் பிரீமியம் கணக்கு தவிர மற்ற பங்கு) | 6,307.39 | 5,072.99 | 6,307.39 | 5,454.53 |
| 8 | கடனீட்டுப் பத்திரங்களின் பிரீமியம் கணக்கு | 174.67 | 173.71 | 174.67 | 174.13 |
| 9 | நிகர மதிப்பு | 6,638.37 | 5,402.98 | 6,638.37 | 5,784.95 |
| 10 | நிலுவையில் உள்ள கடன் | 3,074.88 | 646.33 | 3,074.88 | 632.79 |
| 11 | நிலுவையில் உள்ள மீட்டெடுக்கக்கூடிய முன்னுரிமை பங்குகள் | - | - | - | - |
| 12 | கடன் பங்கு விகிதம் | 0.44 | 0.11 | 0.44 | 0.10 |
| 13 | ஒரு பங்கு வருமானம் (முக மதிப்பு தலா ரூ.2/–) (முடிந்த காலாண்டுக்கான நிலையில் அல்லாத மதிப்பு) | | | | |
| | அ. அடிப்படை (ரூ.) | 4.86 | 4.97 | 13.85 | 16.40 |
| | ஆ. இளகியது (ரூ.) | 4.86 | 4.96 | 13.85 | 16.39 |
| 14 | மூலதன மீட்பு கையிருப்பு | - | - | - | - |
| 15 | கடன் பத்திர மீட்பு இருப்பு | - | - | - | - |
| 16 | கடன் சேவை கணக்கீடு விகிதம் (முறை) (ஆண்டு நிர்ணயம் செய்யப்படவில்லை) | 4.75 | 18.79 | 6.95 | 13.41 |
| 17 | வட்டி சேவை கணக்கீடு விகிதம் (முறை) (ஆண்டு நிர்ணயம் செய்யப்படவில்லை) | 6.59 | 21.41 | 8.67 | 15.04 |

**குறிப்புகள்**

1. நிறுவனத்தின் தனிநிலை நிதி முடிவுகளின் சாராம்சம்

| வ. எண். | விவரங்கள் | தனிநிலை | | | |
|---|---|---|---|---|---|
| | | முடிந்த காலாண்டு | முடிந்த காலாண்டு | முடிந்த ஒன்பது மாதங்கள் | முடிந்த ஆண்டு |
| | | டிசம்பர் 31, 2022 தணிக்கை செய்யப்படாதது | டிசம்பர் 31, 2021 தணிக்கை செய்யப்படாதது | டிசம்பர் 31, 2022 தணிக்கை செய்யப்படாதது | மார்ச் 31, 2022 தணிக்கை செய்யப்பட்டது |
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய் | 9,438.22 | 7,088.75 | 25,629.78 | 27,018.94 |
| 2 | வரிக்கு முன் லாபம் | 190.12 | 185.92 | 1,104.21 | 1,104.40 |
| 3 | வரிக்கு பின் லாபம் | 141.38 | 137.45 | 946.97 | 935.07 |

2. மேற்கண்ட சுருக்க நிதிநிலை அறிக்கை, இந்திய பங்கு பரிவர்த்தனை வாரிய (பட்டியலிடுதலுக்கான கடமைகள் மற்றும் பிற வெளியீடுகளுக்கான தேவைகள்) நெறிமுறைகள் 2015, விதி எண்.33ன்படி, பங்குச் சந்தைகளில் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான காலாண்டு/அரையாண்டு/ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகள் பற்றிய அறிக்கையின் சுருக்கமாகும். காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகள் தொடர்பான முழு அறிக்கை, இந்திய தேசிய பங்கு சந்தை (NSE) மற்றும் மும்பை பங்கு சந்தை (BSE) ஆகியவற்றின் இணையதளங்களிலும், நிறுவனத்தின் www.redingtongroup.com என்ற இணையதளத்திலும் உள்ளன.
3. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், தணிக்கை குழுவால் ஜனவரி 31, 2023 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டு, ரெடிங்டன் லிமிடெட்டின் இயக்குநர்கள் குழும கூட்டத்தில் பிப்ரவரி 1, 2023 ஒப்புதல் அளிக்கப்பட்டது.
4. நிறுவனத்தின் தணிக்கை செய்யப்படாத ஒருங்கிணைந்த மற்றும் தனிநிலை நிதி முடிவுகள் சட்டப்பூர்வ தணிக்கையாளர்களால் குறுகிய மறு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. துணை மற்றும் இணை நிறுவனங்களின் நிதிநிலை முடிவுகள் அந்தந்த சட்டபூர்வ தணிக்கையாளர்களால் குறுகிய மறுஆய்வு செய்யப்பட்டுள்ளது.

ரெடிங்டன் லிமிடெட் சார்பில்
எஸ் வி கிருஷ்ணன்
முழு நேர இயக்குனர் மற்றும் உலகளாவிய தலைமை நிதி அதிகாரி

இடம் : சென்னை
தேதி : பிப்ரவரி 1, 20223

## அமர்ஜோதி ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 157, குமரன் ரோடு, திருப்பூர்–641 601.
E-mail: mill@amarjothi.net Website: www.amarjothi.net
CIN : L17111TZ1987PLC002090 Phone: 0421 4311600

**டிசம்பர் 31, 2022ல் முடிந்த காலாண்டுக்கான தனியான தணிக்கையாகாத நிதிநிலை முடிவுகள் அறிக்கை**

(ரூ. லட்சத்தில்)

| வ எண் | விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஒன்பது மாதங்கள் | | முடிந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|
| | | 31.12.2022 (தணிக்கை யாகாதது) | 30.09.2022 (தணிக்கை யாகாதது) | 31.12.2021 (தணிக்கை யாகாதது) | 31.12.2022 (தணிக்கை யாகாதது) | 31.12.2021 (தணிக்கை யாகாதது) | 31.03.2022 (தணிக்கை யானது) |
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 3255.76 | 4451.11 | 5036.51 | 15098.37 | 18538.04 | 25029.27 |
| 2. | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 167.43 | 271.85 | 493.08 | 1060.29 | 1603.39 | 2035.99 |
| 3. | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 167.43 | 271.85 | 493.08 | 1060.29 | 1603.39 | 2035.99 |
| 4. | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 133.44 | 223.93 | 406.20 | 845.02 | 1320.87 | 2108.91 |
| 5. | காலத்திற்கான மொத்த ஒருங்கிணைந்த வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர ஒருங்கிணைந்த வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | 133.44 | 223.93 | 406.20 | 845.02 | 1320.87 | 2108.91 |
| 6. | சமபங்கு மூலதனம் | 675.00 | 675.00 | 675.00 | 675.00 | 675.00 | 675.00 |
| 7. | கடந்த ஆண்டு தணிக்கையான இருப்பு நிலை அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள இதர ஈக்விட்டி | – | – | – | – | – | 15911.27 |
| 8. | பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (பங்கு ஒன்றின் முகமதிப்பு ரூ.10) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) | | | | | | |
| | 1. அடிப்படை | 1.98 | 3.32 | 6.02 | 12.52 | 19.57 | 31.24 |
| | 2. டைலூட்டட் | 1.98 | 3.32 | 6.02 | 12.52 | 19.57 | 31.24 |

**டிசம்பர் 31, 2022ல் முடிந்த காலாண்டு க்கான ஒருங்கிணைந்த தணிக்கையாகாத நிதிநிலை முடிவுகள் அறிக்கை**

(ரூ. லட்சத்தில்)

| வ எண் | விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஒன்பது மாதங்கள் | | முடிந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|
| | | 31.12.2022 (தணிக்கை யாகாதது) | 30.09.2022 (தணிக்கை யாகாதது) | 31.12.2021 (தணிக்கை யாகாதது) | 31.12.2022 (தணிக்கை யாகாதது) | 31.12.2021 (தணிக்கை யாகாதது) | 31.03.2022 (தணிக்கை யானது) |
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 3168.19 | 4563.57 | 5141.63 | 15137.81 | 19381.17 | 25747.08 |
| 2. | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 198.59 | 313.46 | 518.56 | 1140.59 | 1777.27 | 2169.26 |
| 3. | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 198.59 | 313.46 | 518.56 | 1140.59 | 1777.27 | 2169.26 |
| 4. | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 158.27 | 258.21 | 427.16 | 909.01 | 1464.12 | 2218.42 |
| 5. | காலத்திற்கான மொத்த ஒருங்கிணைந்த வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர ஒருங்கிணைந்த வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | 145.58 | 231.44 | 418.02 | 860.64 | 1432.11 | 2177.32 |
| 6. | சமபங்கு மூலதனம் | 675.00 | 675.00 | 675.00 | 675.00 | 675.00 | 675.00 |
| 7. | கடந்த ஆண்டு தணிக்கையான இருப்பு நிலை அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள இதர ஈக்விட்டி | – | – | – | – | – | 16337.11 |
| 8. | பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (பங்கு ஒன்றின் முகமதிப்பு ரூ.10) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) | | | | | | |
| | 1. அடிப்படை | 2.16 | 3.43 | 6.19 | 12.75 | 21.22 | 32.26 |
| | 2. டைலூட்டட் | 2.16 | 3.43 | 6.19 | 12.75 | 21.22 | 32.26 |

**SEBI (LODR) விதிகள், 2015ன் பிரிவு 52(4)ன்படி ஒருங்கிணைந்த – கூடுதல் வெளிப்பாடுகள்**

| வ எண் | விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஒன்பது மாதங்கள் | | முடிந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|
| | | 31.12.2022 (தணிக்கை யாகாதது) | 30.09.2022 (தணிக்கை யாகாதது) | 31.12.2021 (தணிக்கை யாகாதது) | 31.12.2022 (தணிக்கை யாகாதது) | 31.12.2021 (தணிக்கை யாகாதது) | 31.03.2022 (தணிக்கை யானது) |
| 1. | தற்போதைய விகிதம் (டைம்ஸ்) (தற்போதைய சொத்துக்கள் / தற்போதைய பொறுப்புகள்) | 4.81 | 2.01 | 3.96 | 4.81 | 3.96 | 2.07 |
| 2. | கடன்–ஈக்விட்டி விகிதம் (டைம்ஸ்) (மொத்த பொறுப்புகள் / பங்குதாரர்களின் பங்கு) | 0.31 | 0.51 | 0.48 | 0.31 | 0.48 | 0.68 |
| 3. | கடன் சேவை கவரேஜ் விகிதம்(டைம்ஸ்) (வட்டி, வரி மற்றும் தேய்மானத்திற்கு முந்தைய வருவாய் / (வட்டி + அசல்) | 0.72 | 1.01 | 0.98 | 2.09 | 2.63 | 1.20 |
| 4. | ஈக்விட்டி விகிதம் (%) மீதான வருமானம் (மொத்த விரிவான வருமானம்/பங்குதாரர்களின் பங்கு) | 0.76 | 1.28 | 2.50 | 4.79 | 8.12 | 12.71 |
| 5. | சரக்கு விற்றுமுதல் விகிதம் (டைம்ஸ்) (விற்கப்படும் பொருட்களின் விலை/சராசரி சரக்கு) | 0.62 | 0.76 | 1.60 | 2.86 | 5.89 | 0.60 |
| 6. | வர்த்தக வரவுகள் விற்றுமுதல் விகிதம் (டைம்ஸ்) (நிகர கடன் விற்பனை / சராசரி செலுத்த வேண்டியவை) | 1.87 | 1.60 | 2.02 | 8.66 | 7.42 | 6.90 |
| 7. | வர்த்தகம் செலுத்த வேண்டிய விற்றுமுதல் விகிதம் (டைம்ஸ்) (நிகர கடன் கொள்முதல் / சராசரி செலுத்த வேண்டியவை) | 2.63 | 1.00 | 1.69 | 19.71 | 5.95 | 19.80 |
| 8. | நிகர மூலதன விற்றுமுதல் விகிதம், (டைம்ஸ்) மொத்த வருமானம் / சராசரி வேலை மூலதனம் | 0.50 | 0.78 | 0.57 | 2.29 | 2.07 | 4.19 |
| 9. | நிகர லாப விகிதம், (%) (மொத்த விரிவான வருமானம் / செயல்பாடுகளின் வருவாய்) | 4.10 | 5.03 | 8.07 | 5.60 | 7.13 | 8.43 |
| 10. | பணியமர்த்தப்பட்ட மூலதனத்தின் மீதான வருமானம், (%) (வட்டி மற்றும் வரிக்கு முந்தைய வருவாய் / வேலை மூலதனம் (மொத்த சொத்துக்கள்தற்போதைய பொறுப்புகள்)) | 1.43 | 2.01 | 2.86 | 7.02 | 9.12 | 11.41 |
| 11. | முதலீட்டின் மீதான வருவாய். (%) (முதலீட்டில் இருந்து லாபம் / முதலீட்டிலிருந்து லாபம் ) | 10.39 | 4.80 | 11.58 | 19.76 | 19.69 | 73.65 |

குறிப்பு:

1. மேற்கண்ட தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு 1 பிப்ரவரி 2023 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது மற்றும் கம்பெனியின் சட்ட தணிக்கையாளர்களால் குறுகிய பரிசீலனைக்குட்பட்டதாகும்.
2. செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33–ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு நிதிநிலை முடிவுகளின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டு நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் – பிஎஸ்இ லிமிடெட் (www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் www.amarjothi.net–ல் உள்ளது.
3. கம்பெனியின் செயல்பாடுகள் நூல் உற்பத்தி என்ற ஒரே ஒரு பிரிவுடன் தொடர்புடையது..

**இடம்: திருப்பூர்**
**தேதி: 01.02.2023**

**அமர்ஜோதி ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்டிற்காக**
Sri. R. ஜெய்சந்தர்
**இணை நிர்வாக இயக்குனர்**